4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 569/2022 நாள்: 17.11.2025 பி.வா.சா.1 – சாந்துபீவீ**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை -**

தாவா சொத்து என் பெயரில் தான் உள்ளது. தாவா சொத்து சம்பந்தமாக நான் கிரைய ஒப்பந்தம் வாதிக்கு எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சாட்சி நான் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று கையெழுத்து போட்டது உண்மை, ஆனால் எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் கிரையத்திற்காக ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாட்சி வாதி தான் என்னை ஏமாற்றி கையொப்பம் வாங்கினார் என்று கூறுகிறார். எனக்கு வாதி வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. நான் வழக்கறிஞர் அறிவிப்பு வாங்கிவிட்டு, நான் தற்போது வழக்கறிஞர் அறிவிப்பை பெறவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தப்படி கிரையம் செய்து கொடுக்குமாறு பல முறை வாதி என்னிடம் கேட்டார் என்றால் சரியல்ல, அவரை நான் பார்த்தே இல்லை, ஒரே ஒரு முறை மட்டும் தான் வாதியை பார்த்துள்ளதாக சாட்சி கூறுகிறார். நான் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தப்படி, நான் கிரையத்தை செய்து கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரைய ஒப்பந்தத்தை மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN Digitally signed by M NAMBIRAJAN Date: 2025.11.17 14:17:12 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.